SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல்,
சர்வோ ஆயில்
சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
குரோதி வருடம் ஐப்பசி 21
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 4

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை,
திருமண மற்றும்
சுபவிசேஷங்களுக்கு அனைத்து
விதமான மாடல்களிலும்
சிறந்த முறையில் பைகள்
தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

• புதுச்சேரி • வியாழக்கிழமை, நவம்பர் 7, 2024 • வெளியூர்: 8-11-2024, வெள்ளிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 120 • 6 பக்கம் • ரூ.6

நமது ஆயுதப் படைகளை வலுப்படுத்த அனைத்தையும் செய்வோம்: பிரதமர் மோடி

புதுடெல்லி, நவ. 7-

ஆயுதப் படைகளை வலுப்படுத்தவும், நமக்குச் சேவை செய்பவர்களின் நலனுக்காகவும் நாம் எப்போதும் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

இதே நாளில்தான் ஒரே பதவி ஒரே ஓய்வூதியம் (OneRankOnePension) திட்டம் அமல்படுத்தப்பட்டது. நமது தேசத்தைப் பாதுகாப்பதற்காகத் தங்கள் இன்னுயிரை அர்ப்பணிக்கும் நமது படைவீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களின் துணிச்சலுக்கும் தியாகத்துக்கும் இது ஒரு மரியாதை

ஒரே பதவி ஒரே ஓய்வூதியத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முடிவு என்பது, நீண்டகால கோரிக்கையை நிவர்த்தி செய்வதற்கும், நமது மாவீரர்களுக்கு நமது தேசத்தின் நன்றியை மீண்டும் உறுதிப்படுத்துவதற்குமான ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் லட்சக்கணக்கான ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் குடும்பங்கள் இந்த முக்கிய முயற்சியால் பயனடைந்துள்ளனர் என்பது உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியடைய செய்யும். எண்களுக்கு அப்பால் ஒரே பதவி ஒரே ஓய்வூதியம் என்பது நமது ஆயுதப்படைகளின் நல்வாழ்வுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. நமது ஆயுதப் படைகளை வலுப்படுத்தவும், நமக்குச் சேவை செய்பவர்களின் நலனுக்காகவும் நாம் எப்போதும் முடிந்த அனைத்தையும் செய்வோம். இவ்வாறு அதில் பிரதம்ர் மோடி பதிவிட்டுள்ளார்.

காஷ்மீரில் துப்பாக்கி சண்டை பயங்கரவாதி சுட்டுக்கொலை

குப்வாரா, நவ. 7-

காஷ்மீரின் குப்வாரா மாவட்டதில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை அங்குள்ள லோலாப் என்ற பகுதியில் பாதுகாப்பு படை வீரர்கள் அதிரடி தேடுதல் வேட்டை நடத்தினர்.

இந்த நடவடிக்கையின்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதி ஒருவரை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர். அந்த நபரிடம் இருந்து ஒரு துப்பாக்கி, கையெறி குண்டுகள், துப்பாக்கி குண்டுகள் மற்றும் வெடிப்பொருட்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இதே போல் காஷ்மீரின் பந்திபோரா மாவட்டத்தில் உள்ள கெட்சன் வனப்பகுதியில், கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் பயங்கரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அங்கு தற்போது பாதுகாப்பு படை வீரர்கள் தொடர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் 6 நாட்களுக்கு கனமழை இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, நவ. 7-

தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் மழைக்கான வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதன்படி, இன்று (வியாழக்கிழமை) தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், சென்னை, காஞ்சீபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய 11 மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே நேற்று முன்தினம் வங்கக்கடலில் உருவாக இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி தள்ளிப்போனது. இது நாளையோ அல்லது நாளை மறுதினமோ உருவாக வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்து இருந்தனர். இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை மேலும் தீவிரம் அடையும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் இன்று முதல் 10ம் தேதி வரையிலும், 12, 13 ஆகிய தேதிகளிலும் தமிழ்நாட்டின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கனமழைக்கு வாய்ப்பு என்பதால் இந்த 6 நாட்களும் தமிழ்நாட்டிற்கு மஞ்சள் எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்

திமுகவை அழிக்க நினைப்பவர்களுக்கு மக்கள் பதிலடி கொடுப்பார்கள்

உதயநிதி ஸ்டாலின் பரபரப்பு பேச்சு

தஞ்சை, நவ. 7-

தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை திறந்து வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கினார்.

அதனை தொடர்ந்து திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் அவர் கலந்து கொண்டு பேசியதாவது:

நான் முதன்முதலாக துணை முதல்அமைச்சராக இன்றைய தினம் தஞ்சை வந்தது எனக்கு பெருமையாக உள்ளது. நான் துணை முதல்அமைச்சர் ஆகவேண்டும் என்கிற முதல் தீர்மானம் தஞ்சையில் இருந்துதான் வந்தது. ஒருகாலத்தில் பெண்கள் வெளியில் வருவது இல்லை. ஆனால் இன்று ஏராளமான பெண்கள் திருமண வீட்டிற்கு வந்துள்ளார்கள். இதற்கு காரணம் நம் திராவிடம் தான். பெண் அடிமைத்தனத்தை ஒழித்தவர் பெரியார். மகளிர் வளர்ச்சி தான் மாநில வளர்ச்சி என்பார் தலைவர் ஸ்டாலின். அதற்கு ஏற்றார் போலத்தான் பல திட்ட்டங்களை கொண்டு வந்துள்ளார். திமுகவை அழிக்க வேண்டும் என பல பேர் கிளம்பி உள்ளனர். அதற்கு பதில் சொல்ல தேவையில்லை. தமிழ்நாட்டு மக்களே அதற்கு தகுந்த பதிலடி கொடுப்பார்கள். திமுக கூட்டணியில் விரிசல் விழாதா என பிரிந்து கிடக்கும் அதிமுகவும், பாஜகவும் எதிர்பார்க்கிறார்கள். திமுக தலைமையிலான கூட்டணி உறுதியாக உள்ளது. நம்முடைய தொடர் வெற்றிதான் எதிரணியினருக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. 2026ல் மீண்டும் திமுக ஆட்சி அமைத்து 2வது முறையாக மு.க.ஸ்டாலின் முதல் அமைச்சராக பதவியேற்பார் அதற்காக நாம் உழைக்க வேண்டும். இன்னும் 1.5 ஆண்டில் சட்டமன்ற தேர்தல் வர உள்ளது. நமது இலக்கு 200 தொகுதி வரவேண்டும் என்பது. அதற்கு ஏற்றார் போல் அனைவரும் செயல்பட வெண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

லெபனானில் இஸ்ரேல் வான்வழி தாக்குதலில்: 57 பேர் உயிரிழப்பு

பெய்ரூட், நவ.7-

இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் ஆதரவு அளித்து வருகின்றனர். குறிப்பாக, லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தொடர்ந்து ராக்கெட் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் ராணுவம் லெபனானில் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், கிழக்கு லெபனானில் உள்ள ஹெர்மல் பகுதியில் இருக்கும் கிராமங்கள் மற்றும் நகரங்கள் மீது இஸ்ரேல் ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் மொத்தம் 57 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலில், வரலாற்று சிறப்புமிக்க ‘அல்மான்ஷியா’ கட்டிடம் முழுவதும் சேதமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

திருச்செந்தூரில் இன்று சூரசம்ஹாரம்: லட்சக்கணக்கில் குவியும் பக்தர்கள்

திருச்செந்தூர், நவ. 7-

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2ம் படைவீடாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் திகழ்கிறது. இங்கு முருகப்பெருமான் சுப்பிரமணிய சுவாமியாக காட்சி அளிக்கிறார். இந்த கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாக்களில் மிகவும் சிறப்பு மிக்கதாக கருதப்படுவது கந்தசஷ்டி திருவிழாவாகும்.

இந்த ஆண்டு கந்தசஷ்டி திருவிழா கடந்த 2ந் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கியது. அன்று முதல் கோவிலில் உள்ள தற்காலிக கொட்டகைகளில் பக்தர்கள் விரதம் இருந்து வருகிறார்கள்.

விழா நாட்களில் தினமும் அதிகாலை நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை, உதயமார்த்தாண்ட அபிஷேகம், ஜெயந்திநாதர் யாகசாலை புறப்பாடு, மூலவர், சண்முகருக்கு உச்சிகால பூஜை, யாகசாலையில் உள்ள சுவாமி ஜெயந்திநாதருக்கு தீபாராதனை, பின்னர் தங்கச்சப்பரத்தில் சுவாமி எழுந்தருளல், மாலையில் சுவாமி, வள்ளி தெய்வானை அம்பாள்களுடன் திருவாவடுதுறை ஆதீனம் கந்தசஷ்டி மண்டபத்துக்கு எழுந்தருளும் நிகழ்ச்சிகள் நடந்து வருகிறது.

மேலும் சுவாமி அம்பாள்களுடன் அலங்கரிக்கப்பட்ட தங்க ரதத்தில் கிரிவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அதுபோல் 5ம் நாளான நேற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நேற்று பக்தர்கள் சிலர் தங்களது நேர்த்திக்கடனுக்காக சிவன், கிருஷ்ணர், விநாயகர், முருகர், அவ்வையார், நாரதர் உள்ளிட்ட சாமி வேடங்கள் அணிந்து கோவில் கிரிபிரகாரத்தில் வலம் வந்தனர்.

இந்நிலையில் திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று மாலை நடக்கிறது. இதையொட்டி அதிகாலை 1 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 2 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம், காலை 9 மணிக்கு உச்சிகால அபிஷேகம், மதியம் 1 மணிக்கு சாயரட்சை தீபாராதனை நடைபெறுகிறது.

மாலை 4.30 மணிக்கு சுவாமி ஜெயந்திநாதர் சூரசம்ஹாரத்துக்கு எழுந்தருள்கிறார். கடற்கரையில் சுவாமி, சூரபத்மனை வதம் செய்யும் நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் நடக்கிறது. பின்னர் சந்தோஷ மண்டபத்தில் சுவாமி அம்பாளுக்கு அலங்காரம், தீபாராதனை நடக்கிறது. தொடர்ந்து சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி தெய்வானையுடன் கிரிப்பிரகாரத்தில் உலா வந்து கோவிலை சேர்ந்த பின் அங்கு சாயாபிஷேகம் நடக்கின்றது.

இந்நிலையில் சூரசம்ஹாரத்தை காண உள்ளூர், வெளியூர், வெளிமாநிலம், வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கோவிலில் குவிந்த வண்ணம் உள்ளனர். பக்தர்களின் பாதுகாப்பு கருதி, கடற்கரையில் கம்பு மற்றும் கம்பிகளால் தடுப்பு வேலி அமைக்கப்பட்டு இருக்கிறது. 7ம் திருநாளான நாளை (வெள்ளிக்கிழமை) அதிகாலை 3 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 3.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 4 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடக்கிறது. 5.30 மணி அளவில் தெய்வானை அம்பாள் தபசு காட்சிக்கு புறப்படுகிறார். காலை 9 மணிக்கு உச்சிகால அபிஷேகம், மதியம் 1 மணிக்கு சாயரட்சை தீபாராதனை, மாலை 6 மணிக்கு அம்பாளுக்கு சுவாமி காட்சி கொடுக்கிறார். பின்னர் மாலைமாற்றுதல் நிகழ்ச்சி நடக்கிறது. இரவு சுவாமிக்கும், தெய்வானை அம்பாளுக்கும் திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

கோவையில் தங்க நகை பூங்கா

முதல்வருக்கு தங்க நகை தொழிலாளர்கள் சங்கம் சார்பில் நன்றி தெரிவித்து கொண்டாட்டம்

கோவை, நவ. 7-

கோவை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை புரிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கெம்பட்டிகாலனி பகுதியில் தங்க நகை பட்டறைக்கு நேரில் சென்று தங்க நகை தொழில் புரியும் பொற்கொல்லர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். கோவையில் தங்க நகை தொழில் பூங்கா அமைக்க வேண்டும் கூட்டுறவு சொசைட்டி அமைத்து தர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை பொற்கொல்லர்கள் முன்வைத்தனர்.

இந்நிலையில் கலைஞர் நூலக அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் கோவையில் 126 கோடி மதிப்பீட்டில் தங்க நகை பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். முதல்வரின் அறிவிப்பை தொடர்ந்து கெம்பட்டி காலனி பகுதியில் உள்ள தங்க நகை தொழிலாளர்கள் சங்கம் சார்பில் முதல்வருக்கு பாராட்டுக்கள் மற்றும் நன்றிகளை தெரிவிக்கும் வகையில் பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். இந்நிகழ்வில் செய்தியாளர்களை சந்தித்த சங்கத்தின் தலைவர் பாண்டியன், நேற்றைய தினம் இந்த பகுதியில் முதல்வர் நேரில் வருகை தந்து எங்கள் குறைகளை கேட்டு அறிந்தார் எனவும், அப்போது நாங்கள் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக தங்க நகை பூங்கா கோவையில் அமைக்கப்படும் என முதல்வர் என்று அறிவித்துள்ளது மகிழ்ச்சியை அளிப்பதாகவும் இது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விஸ்வகர்மா தங்க நகை தொழில் புரியும் சமூகத்திற்கும் மகிழ்ச்சியை அளிப்பதாக தெரிவித்தனர். மேலும் பொற்கொல்லர் நல வாரியம் என்பதை ஐந்தொழில் நல வாரியம் என்று மாற்றித் தருமாறு கோரிக்கை வைத்தனர்.

தமிழகத்தில் சட்டசபை தேர்தலுக்கு முன்பே உள்ளாட்சி தேர்தலா..?- வெளியான தகவல்

சென்னை, நவ.7-

தமிழகத்தில் கடந்த 2019ம் ஆண்டு நடத்தப்பட்ட 27 மாவட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் வரும் டிசம்பருடன் காலாவதியாகிறது. எனவே 27 மாவட்டங்களுக்கு உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படுமா? அல்லது ஒட்டு மொத்த உள்ளாட்சி அமைப்புகளையும் கலைத்துவிட்டு உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தற்போதைய கணக்குப்படி, 2019 டிசம்பரில் நடந்த உள்ளாட்சி தேர்தல்களுக்கு 2024 டிசம்பருக்குள் தேர்தல் நடத்த வேண்டும். 2021 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நடந்த உள்ளாட்சிகளுக்கு 2026 செப்டம்பரில் தேர்தல் நடத்த வேண்டும் என்பது தான் விதி.

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் வெற்றி, தோல்வி என்பது 2026 சட்டசபை தேர்தலில் நிச்சயமாக எதிரொலிக்கும் என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். தற்போதுவரை ஒட்டுமொத்தமாக உள்ளாட்சி தேர்தலை முன்கூட்டியே நடத்தப்படுவது குறித்து எந்த முடிவையும் அரசு எடுக்கவில்லை. அதேநேரத்தில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, சரிபார்ப்பு பணியை மாநில தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இந்நிலையில் உள்ளாட்சி தேர்தல் குறித்த தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரியில் கண்ணாடி கூண்டு பாலப்பணியினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக்குழு ஆய்வு

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் எஸ்.காந்திராஜன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, முன்னிலையில் கன்னியாகுமரி கடல்பகுதியில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் பாறையை இணைக்கும் கண்ணாடி கூண்டு பாலப்பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலாளர் சீனிவாசன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழு உறுப்பினர்கள் சேவூர் இராமச்சந்திரன், பாலாஜி, ராஜா, எஸ்.பி.வெங்கடேஷ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம் உட்பட பலர் உள்ளார்கள்.

அதிரடியாக குறைந்த தங்கம் விலை

சென்னை, நவ. 7-

தங்கம் விலை தொடக்கத்தில் இருந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்ட நிலையில், கடந்த மாதம் 16ம் தேதி ஒரு சவரன் ரூ.57 ஆயிரத்தை கடந்து புதிய உச்சத்தை பதிவு செய்தது. அதன் பின்னரும், தங்கம் விலை தொடர்ந்து ஏறுமுகத்திலேயே பயணித்து வருகிறது. இதனால் 2 நாள் இடைவெளியிலேயே அதாவது, கடந்த மாதம் 19ம் தேதி ஒரு சவரன் ரூ.58 ஆயிரம் என்ற நிலையையும் தாண்டியது. அதனைத் தொடர்ந்தும் தங்கம் விலை உயர்ந்து வருவதை பார்க்க முடிகிறது. அந்த வகையில் தங்கம் விலை கடந்த மாதம் 30ம் தேதி ஒரு சவரம் ரூ.59 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் பெற்றது. இதன் மூலம் தங்கம் விலை மீண்டும் வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டியது. நேற்று தங்கம் விலை சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.58,920க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில், இன்று தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.1,320 குறைந்து ரூ.57,600க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.165 குறைந்து ரூ.7,200க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு 3 ரூபாய் குறைந்து ரூ.102க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து ஆட்சியர் ஆய்வு

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆலோசனைக் கூட்டம்

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நாமக்கல் மாநகராட்சி முதலைப் பட்டியில் புதிதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் பேருந்துகளை இயக்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மேயர் து.கலாநிதி, துணைமேயர் செ.பூபதி உட்பட பலர் உள்ளனர்.

குறைத்தீர்வு நாள் கூட்டம்

காயிதே மில்லத் நினைவு
அரங்கம்

வேலூர் மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசுதாரர்களுக்கான குறைத்தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் வே. இரா.சுப்புலெட்சுமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன் மற்றும் சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசுதாரர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் சந்திப்பு திட்ட முகாம்



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மக்கள் சந்திப்பு திட்ட முகாம் நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக உழவியல் துறையில் புதுப்பிக்கப்பட்ட உழவர் பயிற்சி கூடம் திறப்பு

சிதம்பரம், நவ. 7-

அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல உழவியல் துறையில் ராஷ்ட்ரிய உச்சதர்சிக்ஷா அபியான் (RUSA) நிதியுதவியின் மூலம் புதுப்பிக்கப்பட்ட பேராசிரியர் கி.ஸி.லட்சுமணன் உழவர் பயிற்சி கூடத்தின் திறப்பு விழா உழவியல் கூட்டமைப்பின் சார்பாக உழவியல் துறையில் நடைபெற்றது.

திறப்பு விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் உழவியல் துறையின் தலைவர் முனைவர். A.சுந்தரி வரவேற்றார். இவ்விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் முதுமுனைவர் இராம. கதிரேசன் கலந்து கொண்டு பயிற்சிக் கூடத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் வி.பிரகாஷ், தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி முனைவர் ஸி.ஷி.குமார், வேளாண் புலமுதல்வர் முனைவர் கி.அங்கையர் கண்ணி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.இவ்விழாவின் துணைநிகழ்வாக உழவியல் துறையின் ஆராய்ச்சி பண்ணையில்லு ஏக்கர் பரப்பளவில் புதுப்பிக்கப் பட்ட மீன்குட்டையில் மீன்குஞ்சுகளும் துணை வேந்தர் அவர்களால் விடப்பட்டது. இவ்விழாவின் முத்தாய்ப்பாக துணை வேந்தரிடம் ஆராய்ச்சி பயின்ற முன்னாள் ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டு துணை வேந்தர் அவர்களிடம் வாழ்த்து பெற்றனர். விழாவில் பல்கலைக் கழகத்தின் பல்வேறு புலங்களின் முதல்வர்கள், துறைத்தலைவர்கள் உழவியல் துறையின் ஆசிரியர்கள், துணைவேந்த ரின் நேர்முக செயலர் முனைவர் ஜெ.எச். பாக்கிய ராஜ், மக்கள் தொடர்பு அதிகாரி க. ரெத்தினசம்பத், மாணவர்கள் என அனைவரும் பங்கு பெற்று விழாவினை சிறப்பித்தார் கள். விழாவின் இறுதியாகஇணைப்பேராசிரியர் மற்றும் உழவியல் கூட்டமைப்பின் செயலர் முனைவர் வி.மெய்யப்பன் நன்றி கூறி விழாவினை நிறைவு செய்தார்.

சாலைகளில் கால்நடைகளை திரிய விட்டால்

உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படும்

மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை

காரைக்கால், நவ. 7-

காரைக்கால் சாலைகளில் கால்நடைகளை திரிய விட்டால், கால்நடை களின் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படும் என மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காரைக்கால் மாவட்ட கலெக்டர் மணிகண்டன் இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள, கால்நடைகள் வளர்ப்போர் தங்கள் கால்நடைகளை தங்களுக்கு சொந்தமான இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பராமரிக்க வேண்டும்.

ஆனால் சிலர் தங்களது கால்நடைகளை மக்கள் அதிகம் நடமாடும் சாலைகளில் போக்குவரத்திற்கு இடையூறாகவும், பொது மக்கள், பள்ளி மாணவ, மாணவியர், பெண்கள் மற்றும் முதியோர் ஆகியோரின் உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தலாக வும் ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையிலும் சாலைகளில் பராமரிப்பின்றி சுற்றித்திரிய விடுகின்றனர். அவ்வாறு சுற்றித்திரியும் கால்நடை களை பிடிக்க தொடர் புடைய நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாறு பிடிபடும் கால்நடைகளின் உரிமையாளர்கள் மீது உரிய சட்டவிதிகளின் கீழ் அபராதம் அல்லது சிறை தண்டனை அல்லது இரண்டும் சேர்த்தோ காவல் துறை மூலம் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து மற்றும் போலீசார் மூலம் ஏற்கனவே பலமுறை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. எனவே கால்நடைகளை வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள் கால் நடைகளை பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பராமரித்து மாவட்ட நிர்வாகத்திற்கும் நகராட் சிக்கும் காவல் துறைக்கும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் எச்சரிக்கப் பட்டுள்ளது.

மாநில வன்னியர் சங்க தலைவருக்கு கொலை மிரட்டல் விடுத்தவரை கைது செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

கைது செய்! கைது செய்!!
பு.தா.அருள்மொழி
மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

செஞ்சி, நவ. 7-

மாநில வன்னியர் சங்க தலைவர் பு.தா.அருள்மொழியை அவதூறாக பேசி கொலை மிரட்டல் விடுத்த விசிக கட்சியினரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கைது செய்யக்கோரி செஞ்சி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பாட்டாளி மக்கள் கட்சியினர் மற்றும் வன்னியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாவட்ட வன்னியர் சங்க தலைவர் மணிமாறன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வன்னியர் சங்கத்தினர் கலந்துகொண்டு தமிழக அரசையும், காவல்துறையை கண்டித்தும், விசிக நிர்வாகிகளை கைது செய்யகோரி நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டம் செய்தனர். உடன் மாநில செயற்குழு உறுப்பினர் பெருமாள், மாவட்ட துணை செயலாளர்கள் அய்யனார் ஜெயக்குமார், ரகுபதி, ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, அசோக சக்கரவர்த்தி, ஆப்செட் முருகன் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீதிமன்றம் கட்டுவதற்கான இடங்களை ஆட்சியர் பார்வையிட்டார்

கள்ளக்குறிச்சி நவ. 7-

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிதாக கொண்டுவந்துள்ள குற்றவியல்_நீதிமன்றம் கட்டுவதற்கான இடங்களை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சி தலைவர் எம்எஸ்_ பிரசாந்த் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு பின்புறம் இடங்களை பார்வையிட்டார். இதில் ஒன்றிய குழு பெருந்தலைவர் சத்தியமூர்த்தி மற்றும் சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு துணை தலைவர் அன்புமணிமாறன் மற்றும் வட்டாட்சியர் மனோஜ்முணியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிசங்கர், ரங்கராஜன், வருவாய் ஆய்வாளர் வெங்கடேசன், கிராம நிர்வாக அலுவலர் விஜயபாரதி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பணி ஓய்வு பெறும் சத்துணவு ஊழியர்களுக்கு பாராட்டுவிழா

செஞ்சி ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார் பங்கேற்பு

செஞ்சி, நவ. 7-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியம் தேவதானம் பேட்டை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் நவநீதம் என்பவர் சத்துணவு சமையலராகவும், சத்தியமங்கலம் அரசு மேல் நிலைப் பள்ளியில் சின்ன கண்ணு என்பவர் சத்துணவு சமையல் உதவியாளராகவும், பாடிபள்ளம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் சாரதாம்பாள் என்பவர் சத்துணவு சமையல் உதவியாளராக பணிபுரிந்து வயது மூப்புகாரணமாக ஓய்வு பெற்றனர். ஓய்வு பெற்ற சத்துணவு சமையல் மற்றும் உதவியாளர்களுக்கு ஓய்வு பெற்றதற்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார் கலந்து கொண்டு பணி ஓய்வு பெற்ற சத்துணவு சமையலர் நவநீதம், சமையல் உதவியாளர்கள் சின்னக் கண்ணு, சாரதாம்பாள் ஆகியோருக்கு பணி ஓய்வு பெற்றதற்கான ஆணையை வழங்கி சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் சீத்தாலட்சுமி துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பழனி குமார்,சத்துணவு பிரிவு இளநிலை உதவியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பழனியில் சூரசம்ஹாரத்தை காண குவிந்த பக்தர்கள் கூட்டம்

பழனி, நவ.7

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனியில் கந்தசஷ்டி விழா கடந்த 2ம் தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கியது. விழாவை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் காப்புக்கட்டி விரதம் மேற்கொண்டனர்.

மலைக்கோவிலில் தினந்தோறும் உச்சி காலத்தின் போது கல்ப பூஜையும், மாலையில் சண்முகர் தீபாராதனையும் நடைபெற்று வருகிறது.

விழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று மாலை நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு உச்சிகால பூஜையை தொடர்ந்து சாயரட்சை பூஜை நடத்தப்பட்டு சூரர்களை வதம் செய்யும் வகையில் மலைக்கொழுந்து அம்மனிடம் சின்னகுமாரர் வேல்வாங்கும் விழா நடைபெறுகிறது.

அதன் பின் இன்று மாலை 3 மணிக்கு மலைக்கோவில் நடை அடைக்கப்பட்டு சுவாமி பராசக்தி வேலுடன் அடிவாரம் வந்தடைவார்.

இதனால் காலை 11 மணி வரை மட்டுமே மலைக்கோவிலில் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மலைக்கோவிலில் இருந்து சின்ன குமாரர் பராசக்தி வேலுடன் வரும் சமயம் பெரியநாயகி அம்மன் கோவிலில் இருந்து வள்ளி தெய்வானை சமேத முத்துகுமாரசாமி மயில் வாகனத்தில் அடிவாரம் வந்தடைந்தார்.

திருஆவினன்குடி கோவிலில் சிறப்பு பூஜைக்கு பின்பு கிரிவீதியில் இன்று மாலை சூரசம்ஹாரம் நடைபெறும். 4 இடங்களில் நடைபெறும் இந்த விழாவில் வடக்கு கிரிவீதியில் தாரகாசூரன் வதம், கிழக்கு கிரிவீதியில் பானுகோபன் வதம், தெற்கு கிரிவீதியில் சிங்கமுக சூரன் வதம், மேற்கு கிரிவீதியில் சூரபத்மன் வதம் நடைபெறும்.

சூரசம்ஹாரத்தை காண இன்று காலை முதலே ஏராளமான பக்தர்கள் பழனியில் குவிந்து வருகின்றனர். இதில் கந்தசஷ்டி விழாவிற்காக காப்புக்கட்டி விரதம் இருந்த பக்தர்களுக்கு வாழைத்தண்டு, பழங்கள் மற்றும் தயிரால் செய்யப்பட்ட உணவும், கருப்பட்டி, எலுமிச்சையால் தயாரிக்கப்பட்ட சத்து மிகுந்த பானகம் இறைவனுக்கு படையல் இடப்பட்டது.

பின்னர் அந்த உணவை வாழை இலையில் வைத்து நெய்விளக்கு ஏற்றிவைத்து தங்கள் விரதத்தை முடித்துக் கொண்ட பக்தர்கள் அந்த உணவை பிரசாதமாக வாங்கி சாப்பிட்டனர்.

சூரசம்ஹாரத்தில் பங்கேற்பதற்காக தாரகாசூரன் புறப்பாடாகி சென்றார். இதனை தொடர்ந்து ஒவ்வொரு சூரர்களும் புறப்பட்டு செல்லும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சூரசம்ஹாரத்தை காண குவிந்துள்ள பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சூரசம்ஹாரத்தை தொடர்ந்து முருகனுக்கு வெற்றி விழாவும், திருக்கல்யாணமும் நடைபெறும்.

மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மதுரை மேயர் திறந்து வைத்தார்

மதுரை, நவ. 7-

மதுரை மாநகராட்சி கரும்பாலை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் மானகிரி மாநகராட்சி ஆரம்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மேயர் இந்திராணி பொன்வசந்த் திறந்து வைத்தார்.

மதுரை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக நமக்குத் நாமே திட்டம், தனியார் வங்கிகளின் சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் பள்ளிக் கூடங்கள் மேம்படுத்துதல், பூங்காக்கள் அமைத்தல், பொதுசுகாதார மையம் அமைத்தல், பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தனியார் பங்களிப்புகள் பெறப்பட்டு மாநகராட்சியின் சார்பில் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.31 கரும்பாலை பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் SIG INFRASTRUCTURE (2022 23) திட்டத்தின் கீழ் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தையும், வார்டு எண்.33 மானகிரியில் உள்ள மாநகராட்சி ஆரம்பபள்ளியில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தையும் மேயர் இந்திராணி பொன்வசந்த் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தொடர்ந்து மானகிரி ஆரம்ப பள்ளியில் படிக்கும் குழந்தைகளிடம் கல்வி கற்றல் குறித்து மேயர் கலந்துரையாடினார்கள்.

இந்நிகழ்வில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி, கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், உதவி ஆணையாளர் கோபு, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உதவிப் பொறியாளர் பொன்மணி, மாமன்ற உறுப்பினர்கள் முருகன், மாலதி, பள்ளி தலைமை ஆசிரியர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கமல்ஹாசன் பிறந்தநாள்: பினராயி விஜயன் வாழ்த்து

மதுரை, நவ. 7-

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசனுக்கு இன்று 70வது பிறந்தநாள் ஆகும்.

இதையொட்டி தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் நீதி மய்யம் கட்சியினரும், கமல்ஹாசன் ரசிகர்களும் பிறந்தநாளை கொண்டாடி வருகிறார்கள்.

இந்நிலையில் கேரள முதல்வர் பினராயி விஜயன் கமல்ஹாசனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

என் இனிய நண்பருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

சினிமாவின் உண்மையான அடையாளமாகவும், மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக விழுமியங்களில் ஆர்வமுள்ள வக்கீலாகவும், கமல் தனது கலை மற்றும் பொது தலையீடுகள் மூலம் நம் இதயங்களில் ஒரு தனித்துவமான இடத்தை செதுக்கியுள்ளார்.

கேரளா மற்றும் கேரள மக்கள் மீதான அவரது அபிமானம் ஊக்கமளிக்கிறது. அவர் எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சியடைய வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

காமன்வெல்த் பாராளுமன்ற கூட்டமைப்பு தேர்தலில் சபாநாயகர் செல்வம் வாக்களிப்பு

Puducherry
Punjab, India

காமன்வெல்த் பாராளு மன்ற கூட்டமைப்பின் (CPA) 67வது பொதுச்சபை ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ், சிட்னி, ஐ.சி.சி.யில் நடைபெற்றது. சி.பி.ஏ.,வின் செயற்குழுத் தலைவர் தேர்தலும் நடைபெற்றது. அதில் மூன்று போட்டியாளர்கள் இருந்தனர். இதில் புதுச்சேரி சபாநாயகர் செல்வம், வாக்களிக்கும் உறுப்பினர் என்ற அடிப்படையில், இத்தேர்தலில் வாக்களித்தார்.

பொதுப்பணித்துறை வவுச்சர் ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளம் அரசாணை

முதலமைச்சர் ரங்கசாமி வழங்கினார்

புதுச்சேரி, நவ. 7-

பொதுப்பணித்துறை வவுச்சர் ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பள அரசாணையை முதலமைச்சர் ரங்கசாமி வழங்கினார்.

புதுச்சேரி பொதுப் பணித்துறையில் காங்கிரஸ் ஆட்சியில் கடந்த 2010ம் ஆண்டு பணியமர்த்தப் பட்ட 1,202 பேருக்கும், மாதம் 16 நாள் பணி வீதம் ரூ.3,200 சம்பளம் வழங்கப் பட்டு வந்தது. கடந்த 2022ம் ஆண்டு இந்த சம்பளம் ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், பொதுப்பணித்துறை அமைச்சர் ஊழியர்களுக்கு மாத சம்பளம் ரூ. 10 ஆயிரத்தில் இருந்து ரூ.18 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என, முதலமைச்சர் ரங்கசாமி அறிவித்தார். அதன்படி தற்போது பணியாற்றி வரும் 1,202 வவுச்சர் ஊழியர்களுக்கும், 176 வாரிசுதாரர்கள் சேர்த்து மொத்தம் 1,378 பேருக்கு சம்பள உயர்வுக்கான அரசாணை நேற்று வெளியிடப்பட்டது.

சட்டசபையில் முதலமைச்சர் ரங்கசாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், உயர்த்தப் பட்ட சம்பள ஆணையை வவுச்சர் ஊழியர்களுக்கு வழங்கினர். சங்க பொறுப்பாளர் சரவணன் உள்ளிட்டோர் முதலமைச்சர் ரங்கசாமிக்கும், பொதுப் பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணனுக்கும் நன்றி தெரிவித்தனர்.

உலக அளவில் சுற்றுலா பயண பட்டியலில் 2ம் இடம் பிடித்த புதுச்சேரிக்கு லண்டன் சுற்றுலா கண்காட்சியில் விருது

PUDUCHERRY
wtm

புதுச்சேரி, நவ. 7-

லண்டனில் நடைபெறும் உலக சுற்றுலா கண்காட்சி அரங்கில், உலக அளவில் சிறந்த பயண பட்டியலில் 2வது இடம் பிடித்த புதுச்சேரிக்கு விருது வழங்கப்பட்டது.

ஆஸ்திரேலியா நாட்டினைச் சேர்ந்த லோன்லி பிளானட் என்ற பயண ஊடக நிறுவனம் 2025ம் ஆண்டிற்கான சிறந்த பயண இடங்களை வரிசைப்படுத்தி வெளியிட்டுள்ளது. லோன்லி பிளானட்டின் பயண வழிகாட்டியில் 30 பிரபலமான இடங்கள், நகரங்கள், நாடுகள் மற்றும் பிராந்தியங்களை சுற்றுலா பயணிகள் புத்தாண்டில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்கள் என குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, சிறந்த நகரங்கள் பட்டியலில், பிரான்ஸ் நாட்டின் துலூஸின் கால்வாய் கரைகள் முதல் இடத்தை பிடித்துள்ளது. இந்தியாவில் புதுச்சேரி கடற்கரை 2ம் இடம் பிடித்துள்ளது. பல்கேரியாவின் பான்ஸ்கோ 3ம் இடம் பிடித்துள்ளது. லண்டனில் நடந்து வரும் உலக சுற்றுலா கண்காட்சி புதுச்சேரி அரங்கில் இதற்கான விருதினை லோன்லி பிளானட் பயண ஊடக நிறுவனத்தின் படைப்பு பிரிவு நிர்வாக இயக்குனர் அனி கிரீன்பெர்க் வழங்க தலைமைச் செயலர் சரத் சவுகான் பெற்றுக் கொண்டார்.

இது குறித்து படைப்பு பிரிவு நிர்வாக இயக்குனர் அனி கிரீன்பெர்க் கூறுகையில், 'உலக அளவிலான இந்த சர்வேயில் புதுச்சேரி இடம் பிடித்தது சாதாரண விஷயம் இல்லை. அதற்கு ஏற்ப அடுத்த ஐந்தாண்டுகளில் அனைத்தையும் மேம்படுத்தி இதனை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்' என கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை செயலர் ஜெயந்தகுமார் ரே, சுற்றுலாத்துறை மேலாளர் சுப்ரமணியன், பி.டி.டி.சி., மேலாளர் ஆஷா குப்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வினாடி, வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு

புதுக்கோட்டை, நவ. 7-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் மன்றசெயல்பாடுகளின் மூலம் தேன் சிட்டு வினாடி, வினா போட்டி நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க வட்டாரச் செயலாளரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா வினாடி, வினா போட்டியினை ஒருங்கிணைத்தார். வாசிப்பு திறனை அதிகரிக்க பள்ளிகல்வியின் சார்பாக மூன்று இதழ்கள் ஊஞ்சல், தேன்சிட்டு மற்றும் ஆசிரியர்களுக்கு கனவு ஆசிரியர் இதழும் வெளிவந்து கொண்டிருக்கிறது. சிறார் இலக்கியத்திலும் ஒரு மைல்கல்லாக இருந்து வருகிறது. மேலும் மாணவ, மாணவிகளின் படைப்பாளிகளை ஊக்குவிக்க மாணவ, மாணவிகளின் பெயரிலே அவரின் படைப்புகள் இடம் பெற்று வருகிறது.

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்பள்ளி அளவில் நடைபெற்ற ஆறு, ஏழு எட்டு வகுப்பு மாணவர்களுக்கு வினாடி, வினா போட்டியில் தேன்சிட்டு இதழில் இடம் பெற்ற பகுதிகளில் இருந்து வினாக்கள் கேட்கப்பட்டது. குறிப்பாக தமிழ்நாடு மாநில விலங்கு, வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் இயற்றப் பட்ட ஆண்டு, உணவு பதப்படுத்தல் முறையை கண்டுபிடித்தவர், சந்திராயன் தி திட்ட இயக்குனர் யார், பூமியின் இயற்கை துணைக்கோள் எது பூமிக்கும், நிலாவிற்கும் உள்ள இடையே உள்ள தூரம் உள்ளிட்ட வினாக்களும், நடப்பு நிகழ்வு குறித்த வினாக்களும் கேட்கப் பட்டது,

மாணவர்கள் ஆர்வமுடன் பதிலளித்தனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு துளிர் இதழ் பரிசு வழங்கி பாராட்டப்பட்டது. தேன் சிட்டு இதழ் மாதம் இருமுறை வெளிவருகிறது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மணிமேகலை, சிந்தியா, செல்விஜாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமும்
மாலையில்
மாலை
எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதுக்கோட்டை மேயர் ஆய்வு

புதுக்கோட்டை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் தரைத்தளம் அமைக்கும் பணி மற்றும் புதியதாக கட்டப்பட்டு கொண்டிருக்கும் வகுப்பறைகளை மேயர் திலகவதி செந்தில் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். மேயர் திலகவதி செந்திலிடம் பணி நடைபெறும் விவரங்களை மாநகராட்சி உதவி பொறியாளர் கலியகுமார் எடுத்துக் கூறினார். நிகழ்வில் உடன் கழக நிர்வாகிகள் R.தனபால், வட்டச் செயலாளர் இளங்கோ அரசு ஒப்பந்தக்காரர் பாண்டியன்.

பள்ளி குழந்தைகளுக்கான கலைத் திருவிழா

இராமநாதபுரம், நவ. 7-

இராமநாதபுரம் ராஜா தினகர் தொடக்கப் பள்ளியில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி இராமநாதபுரம் வட்டார அளவில் பள்ளி குழந்தைகளுக்கான கலைத் திருவிழா ஆடல் பாடலுடன் நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 04.11. 2024 அன்று முதல் கலை திருவிழா 2024–25 வட்டார அளவிலான போட்டிகள் முதன்மைக் கல்வி அலுவலர் ஏ.சின்னராசு வழிகாட்டுதலின் படியும் மாவட்ட உதவி திட்ட அலுவலர் செல்வராஜ் ஆலோசனைகளின்படியும் இராமநாதபுரம் ஒன்றியம் ராஜா தினகர் உயர்நிலைப் பள்ளியில் ஆரம்பமானது . அன்றிலிருந்து இன்று (7.11.2024) வரை வட்டார அளவிலான அரசு மற்றும் உதவி பெறும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியி, உயர்நிலைபள்ளி, மேல்நிலை பள்ளி படிக்கும் மாணவ மாணவியர்கள் தங்கள் ஓவியம், நடனம், பேச்சுப்போட்டி, களிமண் பொம்மை செய்தல் வண்ணம் தீட்டுதல், பரதநாட்டியம், இசைக்கருவிகள் வாசித்தல் போன்ற திறமைகளை வெளிப்படுத்தினார்கள். முடிவு நாளான இன்று மாணவியர்களின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட்டார கல்வி அலுவலர்கள் இராமநாதன், மல்லிகா தலைமையில், மேற்பார்வையாளர் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பாக நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெறும் மாணவர்கள் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பாளராக கலந்து கொள்வர்.

வன்கொடுமை குற்றம் இழைத்தவர்களுக்கு ஆதரவாக போலீசார் செயல்படுகின்றனர்

மக்கள் உரிமைக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

புதுச்சேரி, நவ. 7-



ஜாதி பெயரை சொல்லி பெண்ணை திட்டியவர்களை கைது செய்ய வேண்டும் என மக்கள் உரிமைக் கூட்டமைப்பு செயலாளர் சுகுமாரன் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து மக்கள் உரிமை கூட்டமைப்பு செயலாளர் கோ.சுகுமாரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த மாதம் 5ம் தேதி திருக்கனூர் அருகே உள்ள மணலிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த தலித் பெண் சாந்தா லட்சுமியை அவரது கணவரின் அண்ணன் சக்திவேல், அவரது மனைவி ஜெயந்தி ஆகியோர் ஜாதி பெயரை சொல்லி ஆபாசமாக பேசி உள்ளனர். சாந்தா லட்சுமி வடிவேலு என்பவரை கலப்புத்திருமணம் செய்து கொண்டார்.

இது குறித்து 6ம் தேதி அளித்த புகாரின் பேரில் 15 நாட்கள் கழித்து கடந்த 21ம் தேதி எஸ்.சி., எஸ்.டி., வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட 4 பிரிவுகளில் பி.சி.ஆர்., பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்தனர். ஆனால், குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் இதுநாள் வரையில் போலீசார் கைது செய்யவில்லை. போலீசார் ஆரம்ப முதல் வன்கொடுமைக் குற்றம் இழைத்தவர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகின்றனர்.

குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் உடனே கைது செய்ய வலியுறுத்தி டி.ஜி.பி.,யை நேரில் சந்தித்து மனு அளிக்க உள்ளோம். க்ஷ

அதன் பின்னரும் கைது செய்யவில்லை என்றால் அரசியல் கட்சிகள், இயக்கங்கள் சார்பில் போராட்டம் நடத்துவோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கம்பைநல்லூர் பகுதியில்

புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்த கடைகளுக்கு சீல்: உணவு பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை

தருமபுரி, நவ. 7-

தர்மபுரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் நடமாட்டத்தை தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் கி.சாந்தி உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் உணவு பாதுகாப்பு துறை மற்றும் காவல்துறை இணைந்து மாவட்டம் முழுவதும் தொடர்ந்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். இதனை தொடர்ந்து தர்மபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா மற்றும் கம்பைநல்லூர் போலீஸ்இன்ஸ்பெக்டர் காளியப்பன் ஆகியோரின் மேற்பார்வையில் காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால், மொரப்பூர் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் திருப்பதி மற்றும் கம்பைநல்லூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முருகன்,போலீசார் சரிதா உள்ளிட்ட குழுவினர் கம்பைநல்லூர் கே.ஈச்சம்பாடி, ஈ.அக்ராகரம், மல்லமாபுரம்,பள்ளம்பட்டி சின்ன ஈச்சம்பாடி மற்றும் இதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மளிகை கடைகள்,பெட்டி பீடா கடைகளில் ஆய்வு செய்தனர்.ஆய்வில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்து கொண்டிருந்த ஈ.அக்ராகரத்தில் ஒரு பெட்டி கடை மற்றும் கம்பைநல்லூர் இருமத்தூர் ஜங்ஷன் பகுதியில் ஒரு பீடா கடை என 2 கடைகளில் இருந்து தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 15 நாட்கள் கடை இயங்க தடை விதித்து 2 கடைகளுக்கும் தலா ரூ 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து நோட்டீஸ் வழங்கப் பட்டது.

இரண்டு புதிய வகுப்பறைகள் கட்ட அடிக்கல் நாட்டு விழா சாக்கோட்டை அன்பழகன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது

கும்பகோணம், நவ. 7-

கும்பகோணம் தொகுதி, அசூர் ஊராட்சியில் உள்ள ஒன்றிய நடுநிலைப்பள்ளி இரண்டு புதிய வகுப்பறைக் கட்டிடம் கட்டித்தர வேண்டும் என பொதுமக்கள், ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர். அந்த கோரிக்கையினை ஏற்று கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2024–2025 ஆம் ஆண்டு ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக் கப்பட்டு கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழ கன் நேற்று அடிக்கல் நாட்டப்பட்டு பொது மக்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

இதில் மத்திய ஒன்றிய செயலாளரும் ஒன்றிய துணை பெருந்தலைவர் டி கணேசன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ சுதாகர் , ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தி சிவன்செயல், துணை தலைவர் K.S.தமிழ்மாறன், அசூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தாமரைச்செல்வி சேகர், முன்னாள் ஒன்றியகுழு உறுப்பினர் சந்திர வேலாயுதம், கிளைக் கழகச் செயலாளர்கள் அருள்,ரவி, பாண்டியன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார் சுவாமிநாதன் உதவி பொறியாளர் அய்யப்பன் வட்டார ஒருங்கிணைப்பாளர் துரை.கார்த்திகேயன் ம.து.வ.வ.அலுவலர் ராகவன் தலைமை ஆசிரியர் ,ஆசிரியர்கள், வார்டு உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்

தமிழக விவசாய சங்க நிர்வாகிகளுடன் தாசில்தார் தலைமையில் பேச்சுவார்த்தை

கயத்தாறு, நவ. 7-

கயத்தாறில் தமிழக விவசாய சங்க சார்பில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் மதுரை மெயின் ரோட்டில் வனத்துறையை கண்டித்தும், காட்டுப்பன்றியை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க கோரி மாபெரும் சாலை மறியல் போராட்டம் நடத்துவதாக அறிவித்திருந்தது. இந்த போராட்டத்தை குறித்து கயத்தாறு தாலுகா அலுவலகத்தில் இன்று தாசில்தார் சுந்தரராகவன் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தையில் தூத்துக்குடி மாவட்ட தமிழக விவசாய சங்கத்தின் தென் மண்டல அமைப்புச் செயலாளர் ராதாகிருஷ்ணன், கயத்தாறு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் கல்யாண பாண்டி, வெள்ளாளர் கோட்டை பஞ்சாயத்து தலைவர் பால்ராஜ் பாண்டியன், வடக்கு கோனார் கோட்டை கிளைச் செயலாளர் செல்லபாண்டியன், மற்றும் கயத்தார் ஒன்றிய விவசாய சங்க தலைவர் வெங்கடேஷ், பஞ்சாயத்து தலைவர்கள் செட்டிகுறிச்சி பஞ்சாயத்து தலைவர் முத்துலட்சுமி கிருஷ்ண சாமி, கட்டாலங்குளம் பஞ்சாயத்து தலைவர் ஜேசுபாலன்ராயன்தம்பா, வெள்ளாளன்கோட்டை பஞ்சாயத்து துணைத் தலைவர்பால்ராஜ், சிதம்பரம்பட்டி பஞ்சாயத்து தலைவர் ஜானகி ராமசாமி, பணிக்கர்குளம் பஞ்சாயத்து தலைவர் ஜெயமுருகன், திருமங்களக் குறிச்சி பஞ்சாயத்து தலைவர் கருப்பசாமி வடக்கு இலந்தைகுளம் பஞ்சாயத்து தலைவர் கணபதி, காப்பலிங்கம்பட்டி பஞ்சாயத்து தலைவர் கருப்பசாமி, ஆசூர் பஞ்சாயத்து துணை தலைவர் மாரிமுத்து, மற்றும் கயத்தாறு காவல்துறை உதவி ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின், கோவில்பட்டி கோட்ட வனவர்பிரசன்னா, தலைமயிடத்து துணைத் தாசில்தார் கோவிந்தராஜ், மற்றும் மற்றும் ஏராளமான விவசாய சங்கத்தினர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் வெள்ளிக் கிழமை நடைபெறும் விவசாய சங்க போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. இது குறித்து இந்த கூட்டத்தில் முக்கிய தீர்மானமாக கயதத்தாறு தாலுகா பகுதியில் சுமார் பல்லாயிரம் ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்கள், 130அரசு குளங்கள், 80க்கும் மேற்பட்ட ஓடைகள், கால்வாய்கள், கழுகுமலை டூ சன்னதுபுதுக்குடி வரை சுமார் 15கிலோ மீட்டர் தூரம் உள்ள உப்பாற்றில் இருபுறமும் அடர்ந்துள்ள வேலிக்கருவேல மரங்களை அப்புறப்படுத்த வேண்டும், இப்பகுதியில் உள்ள பொதுப்பணி துறை மூலம் போடப்பட்ட குளங்களில் உடை மரங்கள் வளர்கப் பட்டதிலும் இந்த காட்டுப் பன்றிகள் பகலில் மறைந்து கிடந்து இரவில் வெளியே வருகிறது.

ஆகவே முதலில் கயத்தாறு வட்டாரப் பகுதியில் அடர்ந்த கருவேல மரங்கள் உடனடியாக அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.மேலும் வருகிற வாரத்தில் மாவட்ட ஆட்சியர் மற்றும் வனத்துறை அதிகாரிகள் டி.எப்.ஓ. மற்றும் விவசாயிகள் ஆகியோர் கூடி பேசுவதாக கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.இதனால் வருகின்ற வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவிருந்த போராட்டம் கைவிடப் பட்டது.

சரிசெய்யப்பட்ட தரைபாலத்தினை ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கடையால் பேரூராட்சிக்குட்பட்ட மூக்கரைக்கல் பகுதியில் சரிசெய்யப்பட்ட தரைபாலத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தினமும் மாலையில்
மாலை எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

மாதந்தோறும் கட்சி நிர்வாகிகளை விஜய் சந்திக்க திட்டம்

சென்னை, நவ. 7-

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் தனது அரசியல் பயணத்தை தொடங்கினார். அவர் முதல் அரசியல் மாநாட்டை கடந்த மாதம் 27ந் தேதி விக்கரவாண்டி வி சாலையில் நடத்தினார்.

மாநாட்டில் லட்சக் கணக்கான தொண்டர்கள் பங்கேற்றதுடன் மாநாட்டு மேடையில் விஜய் தனது முதல் அரசியல் பேச்சை அதிரடியாக பேசி அரசியல் அரங்கை அதிர வைத்தார்.

கட்சி கொள்கை, திட்டங்கள் திராவிட அரசியல் இரு மொழி கொள்கை மற்றும் பல்வேறு அரசியல் சார்ந்த விஷயங்களை அவரது பாணியில் விஜய் பேசியது தமிழகமே திரும்பி பார்க்கும் வகையில் அமைந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 3ந் தேதி (ஞாயிறு) அன்று சென்னை பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்தில் நிர்வாகிகளை தனித்தனியாக அழைத்து பேசி அவர்களை உற்சாகப்படுத்தியதுடன் கட்சியின் அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றி விரைவில் வெளியிடுவேன் என்றார். முதல் மாநாட்டை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு தந்து வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டினீர்கள். அடுத்த மாநாட்டை இன்னும் சிறப்பாக நடத்துவோம் என கூறி நிர்வாகிகளை உற்சாகப்படுத்தினார்.

செயற்குழு கூட்டம் முடிவடைந்ததை தொடர்ந்து விஜய் தனது 69 வது படத்தின் படப்பிடிப்பில் பங்கேற்று நடித்து வருகிறார். 2வது கட்டமாக நடந்து வரும் படத்தின் படப்பிடிப்பில் 15 நாட்கள் தொடர்ந்து விஜய் பங்கேற்ற பின்னர் மீண்டும் அரசியல் பணியில் சில நாட்கள் ஈடுபட இருக்கிறார்.

கட்சி வளர்ச்சி மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை பற்றி கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்களுடன் விஜய் மாதந்தோறும் ஆலோசனை நடத்த திட்டமிட்டுள்ளார்.

இதுபற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது.

மேலும் கட்சியில் புதிதாக இணைவதற்கு ஏராளமானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர். இணைப்பு விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

அடுத்த தலைமுறையினருக்கு சிறந்த தலைவராக கமலா ஹாரிஸ் இருப்பார்: ஜோ பைடன்

வாஷிங்டன், நவ.7-

அமெரிக்காவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான டொனால்டு டிரம்ப் (வயது 78) அபார வெற்றி பெற்றுள்ளார். இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளரும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் தோல்வி அடைந்தார். அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டிரம்ப் பொறுப்பேற்க உள்ளார். அதற்கான வேலைப்பாடுகள் வெள்ளை மாளிகையில் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள டிரம்பிற்கு தொலைபேசி வாயிலாக ஜோ பைடன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டிரம்பை வெள்ளை மாளிகையில் சந்திக்குமாறும் ஜோ பைடன் அழைப்பு விடுத்துள்ளார். தேர்தல் முடிவுகள் குறித்து, ஜோ பைடன் நாளை நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். ஜோ பைடன் சுமூகமான மாற்றத்தை உறுதி செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார். நாட்டை ஒன்றிணைக்க உழைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஜோ பைடன் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,

இன்று அமெரிக்கா பார்க்கும் ஒரு சிறந்த நிர்வாகி கமலா ஹாரிஸ். அவரிடம் நேர்மையும், தைரியமும் உள்ளது. அசாதரண சூழ்நிலையிலும் அவர் ஒரு வரலாற்று பிரசாரத்தை முன்னெடுத்தார். தொடர்ந்து மக்களுக்காக போராடுவார். 2020ல் நான் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட போது, கமலாவை துணை ஜனாதிபதியாக, தேர்ந்தெடுத்தது தான் நான் எடுத்த முதல் முடிவு. இதுவே எனது சிறந்த முடிவு ஆகும்.

கமலா ஹாரிஸ் தொடர்ந்து உரிய நோக்கத்துடனும், உறுதியுடனும், மகிழ்ச்சியுடனும் அரசை எதிர்த்து குரல்கொடுப்பார். அனைத்து அமெரிக்க மக்களுக்கும் ஒரு சிறந்த சாம்பியன்ஷிப்பாக இருப்பார். எல்லாவற்றிக்கும் மேலாக அமெரிக்காவின் எதிர்காலத்தில் முத்திரை பதிக்கும்போது அடுத்த தலைமுறையினர் எதிர்பாக்கும் ஒரு சிறந்த தலைவராக கமலா ஹாரிஸ் இருப்பார் என்று அதில் பதிவிட்டுள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் காலாண்டு தேர்வு தேர்ச்சி விகிதம் குறித்து ஆட்சியர் ஆய்வு

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, வேலூர் வட்டாரம் நகர்ப்புற பகுதி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு ஆசிரியர்களுடன் காலாண்டு தேர்வு தேர்ச்சி விகிதம் குறித்து பாடவாரியாக ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது முதன்மை கல்வி அலுவலர் செ.மணிமொழி, மாவட்ட கல்வி அலுவலர்கள் மகாலிங்கம் (இடைநிலைக்கல்வி), ரமேஷ் (தனியார் பள்ளிகள்). தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

அரசு வேலை ஆட்சேர்ப்புக்கான விதிகளை பாதிவழியில் மாற்ற முடியாது: உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, நவ.7-

அரசு வேலைக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான வழக்கு இன்று தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான ஐந்து நீதிபகள் கொணட பெஞ்சு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு வேலைக்கான ஆட்சேர்ப்பு விதியை பாதி வழியில் மாற்ற முடியாது. அதாவது ஆட்சேர்ப்புக்கான நடைமுறைகள் தொடங்கியபின் பரிந்துரைக்கப்படாவிடில் மாற்ற முடியாது என நீதிபதிகள் ஒருமித்த கருத்து அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தேர்வு விதிகள் தன்னிச்சையாக இருக்கக் கூடாது. அரசியலமைப்பின் 14வது பிரிவின்படி இருக்க வேண்டும் என பெஞ்ச் தெரிவித்துள்ளது.

வெளிப்படைத்தன்மை மற்றும் பாகுபாடு இல்லாதது பொது ஆள்சேர்ப்பு செயல்முறையின் தனிச்சிறப்பாக இருக்க வேண்டும் என்றும், நடுநிலையில் விதிகளை மாற்றுவதால் விண்ணப்பம் செய்தவர்கள் ஆச்சரியப்படக்கூடாது எனவும் பெஞ்ச் தெரிவித்துள்ளது.

இந்தியா அமெரிக்கா இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த மோடி-டிரம்ப் உறுதி

புதுடெல்லி, நவ.7-

உலக அளவில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 5ந்தேதி நடந்தது. இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் போட்டியிட்டார். குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் போட்டியிட்டார்.

இந்நிலையில், ஜனாதிபதி தேர்தலில் 270க்கும் கூடுதலான எலக்டோரல் வாக்குகளைப் பெற்று டொனால்டு டிரம்ப் அபார வெற்றி பெற்றுள்ளார்.இதையடுத்து அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்க உள்ளார். அவருக்கு பல்வேறு உலக தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், பிரதமர் மோடி தொலைபேசி வாயிலாக டிரம்ப்புக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார். இந்நிலையில், இந்த தொலைபேசி உரையாடல் தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

“அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், அவரது குடியரசு கட்சியின் வெற்றிக்கும் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார். டிரம்ப்பின் வெற்றியானது அமெரிக்க மக்கள் அவரது தலைமை மற்றும் தொலைநோக்கு சிந்தனை மீது வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது என்று பிரதமர் மோடி கூறினார். இந்த உரையாடலின்போது தொழில்நுட்பம், பாதுகாப்பு, ஆற்றல், விண்வெளி மற்றும் பல துறைகளில் இந்தியா அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தற்கான தங்கள் அர்ப்பணிப்பை அவர்கள் உறுதிப்படுத்தினர். இரு நாட்டு மக்களின் நலனுக்காகவும், உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காகவும் இந்தியா அமெரிக்கா இடையிலான விரிவான உலகளாவிய மூலோபாய கூட்டாண்மையின் முக்கியத்துவத்தை இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினர். அதோடு கடந்த முறை டிரம்பின் ஆட்சிக் காலத்தில், 2019 செப்டம்பரில் ஹூஸ்டனில் நடந்த ‘ஹவுடி மோடி’ நிகழ்வு மற்றும் 2020 பிப்ரவரியில் டிரம்பின் இந்திய வருகையின்போது அகமதாபாத்தில் நடந்த ‘நமஸ்தே டிரம்ப்’ நிகழ்வு உள்ளிட்டவற்றை பிரதமர் மோடி நினைவு கூர்ந்தார்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

67வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் சபாநாயகர் அப்பாவு உரையாற்றினார்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற 67வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார்.

அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் எஸ்.காந்திராஜன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலாளர் சீனிவாசன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழு உறுப்பினர்கள் சேவூர் இராமச்சந்திரன், பாலாஜி, ஈ.ராஜா, சுதர்சனம், எஸ்.பி.வெங்கடேஷ்வரன், கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் ந.தளவாய் சுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. பாலசுப்பிரமணியம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாபு, மாவட்ட வன அலுவலர் பிரசாந்த், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா உள்ளார்கள்.

மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கல்

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம், அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

பள்ளி செல்லா இடைநின்ற குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து சென்ற ஆட்சியர்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெடுங்குணம் பழங்குடி நகரைச் சார்ந்த பள்ளி செல்லா இடைநின்ற குழந்தைகளுக்கு கல்வி கற்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்து புத்தகம் மற்றும் சீருடைகளை வழங்கி, செய்தியாளர்களுடன் சென்று பள்ளிக்கு அழைத்து சென்றார்கள்.

சல்மான் கானிடம் ரூ.5 கோடி கேட்டு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது

மும்பை, நவ. 7-

பாலிவுட் நடிகரான சல்மான் கானுக்கு மீண்டும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், மிரட்டல்காரர்கள் அவரிடம் இருந்து ரூ.5 கோடி கேட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். மும்பை போக்குவரத்து காவல்துறையினரின் ஹெல்ப்லைனில் நள்ளிரவில் கொலை மிரட்டல் அழைப்பு வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர். மிரட்டல் விடுத்தவர் மராட்டிய அமைச்சர் பாபா சித்திக் கொலையில் தொடர்புடைய லாரன்ஸ் பிஷ்னோயின் சகோதரர் என்று கூறியதாகவும் போலீஸ் அதிகாரி கூறியுள்ளார். சல்மான் கான் உயிருடன் இருக்க விரும்பினால், அவர் எங்கள் பிஷ்னோய் சமூகத்தினர் கோவிலுக்குச் சென்று மன்னிப்பு கேட்க வேண்டும் அல்லது ரூ.5 கோடி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், அவரைக் கொன்று விடுவோம் என்று அந்த செய்தியில் கூறியுள்ளார். இதனால் சல்மான் கானுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளனர். இது குறித்து மும்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில், இந்த கொலை மிரட்டல் கர்நாடக மாநிலத்தில் இருந்து வந்தது தெரியவந்தது. உடனடியாக கர்நாடக மாநிலத்திற்கு விரைந்து சென்ற தனிப்படை போலீசார் அங்கு ஜல்ராம் பிஷ்னோய் (வயது35) என்பவரை பிடித்து விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், மிரட்டல் விடுத்தது அவர்தான் என்பது உறுதியானது. இதைத் தொடர்ந்து அவரை கைது செய்த போலீசார் உள்ளூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி உள்ளனர். முழுமையான விசாரணைக்கு பிறகு மிரட்டல் பின்னணி தெரியவரும் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

சிறப்பாக பணியாற்றிய மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், துறை பணியாளர்களுக்கு முதலமைச்சர் பாராட்டு

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில், கோவை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத் திட்டங்களை அதிக அளவில் கொண்டு சேர்த்து, சிறப்பான முறையில் பணியாற்றிய மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ்.சந்திரமோகன் மற்றும் துறை பணியாளர்களை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், ஆகியோர் உள்ளனர்.

குடியரசு தின தடகள விளையாட்டு போட்டிகளை முன்னிட்டு ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைப்பு

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு வ.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 65வது மாநில அளவிலான குடியரசு தின தடகள விளையாட்டு போட்டிகளை முன்னிட்டு ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார். உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி.சரஸ்வதி, ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மரு.மனிஷ், துணை மேயர் வே.செல்வராஜ் உட்பட பலர் உள்ளனர்.

மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்

சேலம் மாவட்டம்
அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றிய
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் மாவ

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், அன்னை கஸ்தூரிபா திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

கடலூர் அரசு மருத்துவமனையில் அமைச்சர்கள் ஆய்வு

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சிகிச்சைப் பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து, மருத்துவமனையில் வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணு பிரசாத், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைசெல்வன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன் உட்பட பலர் உள்ளனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

திமுகவை அழிக்க நினைப்பவர்களுக்கு மக்கள் பதிலடி கொடுப்பார்கள்: உதயநிதி ஸ்டாலின்

தமிழ்நாட்டில் 6 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு

காஷ்மீரில் பயங்கரவாதி சுட்டுக்கொலை

மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 7-11-2024 வியாழக்கிழமை •வெளியூர்: 8-11-2024 வெள்ளிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்